Event Updates

# இருப்பதும் பெறுவதும்

**ஆவணப்பட திரையிடல் மற்றும் உரையாடல்**

சமீபத்தில் நாங்கள் பார்த்து வியந்த இத்திரைப்படத்தைப் பற்றி பகிர்ந்துகொள்வது அவசியம் என்று தோன்றியது. இது ஒரு ஃப்ரென்ச் ஆவணப்படம். மாணவர்களிடம் ஈடுபாட்டோடு பணிபுரியும் ஆசிரியர் பற்றியது. அவர் நடத்திய அப்பள்ளியில் 4 வயதுமுதல் 11 வயதுள்ள குழந்தைகளுக்கு ஒரு வீட்டில் ஒரே ஆசிரியராய் செயல்படும் விதத்தைப் பார்த்து வியக்க முடிந்தது. ஒரே வயதுக்குட்பட்ட ஒரு வகுப்பு மாணவர்களைத் தனி வகுப்பில் வைத்துக் கையாள்வதை பெறும் சவாலாகக் கருதும் நமக்கு அதிசயமாகத்தான் இருக்கும்.

ஆசிரியரின் மாணவர்களுடனான உரையாடல் இப்படத்தின் பலமாக உள்ளது. இளம் குழந்தைகளுடன் இப்படி உரையாடுவதுபோல் படம் துவங்குகிறது.

மா: இது காலையா? மதியமா?

ஆ: நீ மதிய உணவு சாப்பிட்டுவிட்டாயா?

மா: இல்லை

ஆ: இது காலையா? மதியமா?

மா: மதியம்

ஒவ்வொரு மாணவருடனும், அவர் நடத்தும் உரையாடல் அது குழந்தைகளின் கல்வியாக, கண்டுபிடிப்பாக, தேடலாக, மாறுகிறது.

- கொடுக்கப்பட்ட வேலைகளை முடிக்காத முடிக்க விரும்பாத மாணவருடன்
- வகுப்பறையில் மாணவர்கள் எழுதியதை ஆய்வுக்குட்படுத்த
- மாணவர்களுடன் நடைபெறும் சிறு சிறு பிரச்சனைகளைத் தீர்க்க



- நாளை கற்க வேண்டியதைத் திட்டமிட
- நட்பாக இருக்க
- சேர்ந்து விளையாட, சாப்பிட,
- சிறு சிறு செயல்களில் ஈடுபட

என உரையாடல் நீண்டுகொண்டே இருக்கிறது. மாணவர்களிடம் நாம் அன்றாடம் சந்திக்கும் அதே சிக்கல்கள்தான். அதே வாழ்வியல்முறை என்றும்கூட தோன்றியது. மாணவர்கள் தங்களுக்குள் அடித்துக் கொள்வதும் சேர்ந்துகொள்வதும். ஆசிரியராய் நாம் அவர்களது பண்புகளை வளர்ப்பதில் அவர் ஈடுபடும் விதம்தான் நாம் கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. மாணவர்களைத் திட்டாமல், தண்டிக்காமல் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வழியை ஆசிரியர் உணரவைக்கக் கூடியதாக இருக்கிறது. குழந்தைகள் பேசுவதைக் கவனித்தல், குழந்தைகளை உற்று நோக்குதல், அவர்களையே அதைப்பற்றி யோசிக்க வைத்தல் போன்ற விஷயங்களை நம் வகுப்பறைகளை எட்ட இன்னும் காலம்கடத்துவது எவ்வகையில் நியாயம் என்ற கேள்வியை எழுப்பியது.

ஒரு தாய், தன் மகள் தனித்திருக்கும் பிரச்சனையை, ஆசிரியரின் கவனத்திற்குக் கொண்டுவருவதும், அது தொடர்பாக அவர்களிடையே நடக்கும் உரையாடல்

ஆசிரிய பெற்றோரிணக்கத்தின் அவசியம் பற்றிமட்டுமல்லாமல், எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியது. ஏனெனில் பொதுவாக நாமும் அதையெல்லாம் செய்வதுபோன்று நமக்கு இருக்கிறது. அவற்றை எப்படி செய்யவேண்டும் என்பதைக் காட்சியாகப் பார்க்கும்பொழுது நமது செயல்பாடுகள் தவிடு பொடியாக்குகிறது. பள்ளியை நான் என் இதயத்தின் ஆதர்ஷமானதாக நடத்தி வருகிறேன். என்கிறார். அது நம் இதயத்தைத் தொட்டுவிட்டு செல்கிறது. குழந்தைகளை வயல் வெளிகளுக்கு அழைத்துச் சென்று, மழைகளில் நனையவிட்டு, பனிக்கட்டிகளில் சருக்கவைத்து, ஒவ்வொருவராக ஆம்லெட் போடவைத்து. கற்றுத்தரும் கல்விக்கும் நம் கல்விக்குமான இடைவெளி நீளமானதுதான். கல்வி வெறும் பாடப்புத்தகம் சார்ந்ததல்ல என்பது நமக்குத் தெரியும். ஆனால் அதை வாழ்வியலோடு இணைக்க, குழந்தைகளின் இயல்புகளோடு சேர்த்து புரிந்துகொள்ள ஆசிரியர்களாகிய நாம் பழக்கப் படுத்தப்படவில்லை. பழகிக்கொள்ளவும் இல்லை.

ஒரு காட்சியில் ஒரு மாணவனும் ஆசிரியரும் தனியாக உட்கார்ந்து பேசுகிறார்கள். மாணவரின் அப்பா நோய் வாய்ப்பட்டுள்ளதைப் பற்றிய உரையாடல். மாணவனை ஆற்றுபடுத்துவது, நோயின் தன்மையை புரிந்துகொள்ள வைப்பது, அவரால் செய்யமுடியும் உதவி, மாணவன் எதிர்கொள்ள வேண்டிய விதம் என உரையாடல் நீள்கிறது. பெரும்பாலும் கேள்விகளாலேயேதான் கற்றுக்கொடுக்கிறார். அதேபோல் இவரது பள்ளி-யிலிருந்து வேறு பள்ளிக்குப் படிக்கச்செல்லும் மாணவர்களைத் தயார்படுத்தும் விதமும் அற்புதம்.

பள்ளிக்கு வெளியே அவர்களது பயணம் முக்கியமானது. வெளியிடத்தில் அவர்களது செயல்பாடுகளுக்கு பழக்குவதாக மட்டும் அது இல்லை. ஒரு நூலகத்திற்கு செல்கிறார்கள். நூலகர் அங்குள்ள புத்தகங்கள் பற்றி விளக்குகிறார். அது தொடர்பான உரையாடல் நம் பாடத் தொடர்புடையதுதான் ஆனால் நாம் சிந்திக்காததாக இருந்தது.

படம் முடியும் விதம் அழகானதாக இருந்தது. அக்கல்வியாண்டு முடிகிறது. விடுமுறைக்குமுன் ஆசிரியர் மாணவர்களிடம் விடைபெறும் விதம் நெகிழ வைத்தது.

படம் பார்த்து முடித்தபொழுது, இன்னும் இரண்டு மணிநேரம் நீண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் எனத் தோன்றியது. எங்களது உரையாடலில் பல இடங்களில் நம் வகுப்பறையை ஒப்பிட்டுப் பேசினோம். நாம் சிந்திக்க மறந்த விஷயங்களைப் பற்றி பேசினோம். நம்மால் நமது மாணவர்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளதா என கேட்டுக்கொண்டோம். இன்றும் கூட கற்றல் கருவிகளற்ற நமது வகுப்பறையும், திட்டமிடப்படாத பாடச்செயல்பாட்டையும் ஒப்பிட்டுப் பார்த்தோம். இருப்பதும் பெறுவதும் ஆவணப்படமாக மட்டுமல்லாமல் பாடமாகவும் அமைந்துள்ளது. வாய்ப்பிருந்தால் மட்டுமல்ல வாய்ப்பை உருவாக்கி நீங்களும் ஒரு முறை இப்படத்தைப் பாருங்கள்.



**கே. ஜேம்ஸ் குமார்**
தொ.ப.ஆ அ. தொ.ப
அரங்கனூர்


**க. சுபாஷினி**
தொ.ப.ஆ அ. தொ.ப
நோணாங்குப்பம்